அயோத்திதாசர் சிந்தனைகள்

1. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?

அயோத்திதாசாரின் கொள்கைகளை வலியுறுத்தவும், ஒடுக்கப்பட்டோர் நலன் பாதுகாக்கவும், சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் பராமரித்தல், குடிகளின் பாதுகாப்புக்குக் காவல்துறையினரை நியமித்தல், பொது மருத்துவமனைகள் அமைத்தல், சிற்றூர்கள் தோறும் கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்காகத் திராவிட மகாஜன சங்கம் போராடியது.

2. அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.

அயோத்திதாசர் 1907ஆம் ஆண்டு சென்னையில், 'ஒரு பைசாத்தமிழன்' என்னும் வார இதழைக் காலணா விலையில் தொடங்கினார். ஓராண்டிற்குப் பிறகு அதன் பெயரைத் 'தமிழன்' என மாற்றினார். மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிவு படுத்துவதே, இந்த இதழின் நோக்கம் என்று அயோத்திதாசர் குறிப்பிட்டார். தமிழன் இதழ் மூலம் தமிழ்நாடு மட்டுமின்றி மைசூர், கோலார், ஐதராபாத், இரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவுச் சிந்தனை, இன உணர்வு, சமூகச் சிந்தனை ஆகியவற்றை ஊட்டினார்.

3. அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?

விடுதலை என்பது வெறும் ஆட்சி மாற்றம் மட்டும் அன்று. அது மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து. சுய ராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டுமே இருக்கக் கூடாது.

மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அது அமைய வேண்டும். மக்களின் வாழ்க்கையில் மாற்றம் உண்டானால் ஒழிய, நாடு முன்னேற முடியாது என்று ஆணித்தரமாகக் கூறினார் அயோத்திதாசர்.

4. வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

வாழும் முறை : அன்பு கொண்டு வாழ வேண்டும். கோபம், பொறாமை, பொய், களவு போன்றவற்றை நீக்கி வாழ வேண்டும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது. அறிவை அழிக்கும் போதைப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடாது.

சமத்துவம் : அயோத்திதாசர் மக்கள் அனைவரும் சம உரிமை பெற்று சமத்துவமாக வாழ வேண்டும் என்று விரும்பினார். கல்வி, வேளாண்மை,

காவல்துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் மக்கள் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்க வேண்டும். ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் ஆகியவற்றில் எல்லா வகுப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். இந்து, பௌத்தம், கிறித்துவர், இஸ்லாமியர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் போன்ற அனைவருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர் அயோத்திதாசர்.

5. சிந்தனைகளின் அடித்தளம் அயோத்திதாசர் என்பதை விளக்குக.

- அயோத்திதாசர் தமிழ் மட்டுமின்றி பாலி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.
- இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், சமயத் தத்துவம் உள்ளிட்ட பல்துறை நூல்களையும் ஆழ்ந்து கற்றார். இத்தகைய ஆழ்ந்த படிப்பு அவரது புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது.

6. அயோத்திதாசரின் கல்வி சிந்தனைகள் யாவை?

ஒரு மனிதனின் அறிவு வளர்ச்சி பெற வேண்டுமானால், கல்வி அறிவு அவசியம் என்று அயோத்திதாசர் கருதினார். நிலவு நாளும் வளர்ந்து முழு நிலவாக ஒளி வீசுவது போல் கல்வி நிறுவனங்களில் அறிவை வளர்க்கும் நூல்கள் கற்பிக்கப்பட வேண்டும். கல்வியோடு கைத்தொழில், வேளாண்மை, தையல், மரம் வளர்த்தல் போன்றவற்றையும் கற்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பெண்களும் கல்வி கற்று தன் வாழ்க்கையைத் தானே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெற வேண்டும் என்றார்.

7. தனித்தன்மையுடைய சிந்தனையாளர் அயோத்திதாசர் என்பதை விளக்குக.

   அயோத்திதாசர் காலத்தில் பண்டிதர், புலவர், நாவலர், பேச்சாளர், எழுத்தாளர் எனப் பலர் இருந்தனர். ஆயினும் பகுத்தறிவு, இலக்கியம், சமூகம், சமயம், அரசியல், வரலாறு, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றில் அக்கறை கொண்டு புதிய சிந்தனைகள் விதைத்தவர். அயோத்திதாசர் மட்டுமே! எனவே, அவரை அன்றைய தமிழர்கள் தனித்தன்மை உடைய சிந்தனையாளராக மதித்தனர்.